27—

விளையாட்டுத் திடல்

***36057—திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, துறையூர் நகராட்சியில் விளையாட்டுத் திடல் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) துறையூர் தொகுதி, துறையூர் நகராட்சியில் விளையாட்டுத் திடல் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.*

திருமதி த. இந்திராகாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூலோக சொர்க்கம், புரட்சித் தாயின் பக்கம் என தீர்க்கமாய் தீர்ப்பெழுதிய திருவரங்கம் என்றைக்குமே புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கோட்டையென உலகிற்கு உணர்த்திய உன்னதத் தாயே! விழி அசைவில் வெற்றிகளை வென்றிட்ட வெற்றித் திருமகளே! (மேசையைத் தட்டும் ஒலி) சோதனைகளையெல்லாம் சாதனைகளாக்கி, சாதனைகளையெல்லாம் சரித்திரங்களாக மாற்றிய சாதனைத் தலைவியே! இதய தெய்வம் மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

துறையூர் நகராட்சி மிகவும் கூடுதலாக 35,000 மக்கள்தொகை உள்ள பகுதி. அந்தப் பகுதியிலே உள்ள சாலைகள் மிகவும் குறுகலாக இருக்கின்றன. நடைப்பயிற்சி செய்யவேண்டும் என்றால்கூட, அங்கே போதிய வசதி இல்லை; பாதுகாப்பான சூழ்நிலை இல்லை. எனவே 9–வது வார்டில் சுவாமிநாதன் நகரில்

2015 பிப்ரவரி 19]

அரசுக்குச் சொந்தமான நிலம் உள்ளது. இப்போது வாய்ப்பில்லையென்றாலும்கூட, வருங்காலத்தில் அந்தப் பகுதியிலுள்ள மக்களின் நிலையை உணர்ந்து, 9-வது வார்டில் ஒரு விளையாட்டுத் திடல் அமைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக நலனே தன் நலன், தமிழக மக்களே தன் மக்கள் என தமிழக முன்னேற்றத்திற்காக தினம் தினம் திட்டங்கள் தந்து, இந்தியாவில் தமிழகத்தை எல்லாத் துறைகளிலும் முன்னோடி மாநிலமாக உருவாக்குவதோடு, விளையாட்டுத் துறையிலும் முன்னோடி மாநிலமாக மாற்றிவரும் மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு தமிழக விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் சார்பாகவும், துறையின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

முற்பகல் 11–05

இந்த ஆண்டு நடந்த 20-வது காமன்வெல்த் போட்டியில் தமிழகம் 3 தங்கப் பதக்கங்களும், 4 வெள்ளிப் பதக்கங்களும், 17-வது ஆசிய விளையாட்டுப் போட்டியில் தமிழகம் 5 தங்கப் பதக்கங்களும், 5 வெள்ளிப் பதக்கங்களும், 4 வெண்கலப் பதக்கங்களும், 35-வது தேசியப் போட்டியில் தமிழகம் 16 தங்கப் பதக்கங்களும், 16 வெள்ளிப் பதக்கங்களும், 20 வெண்கலப் பதக்கங்களும் பெற்று விளையாட்டுத் துறையில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்கள் செயல்படுத்தி வரும் திட்டங்களினால் தமிழகம் விளையாட்டுத் துறையில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது என்பதில் பெருமைப்படுகின்றோம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருச்சி மாவட்டம், துறையூர் தொகுதியில் விளையாட்டுத் திடல் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு விளையாட்டு அரங்கம், ஒரு உள்விளையாட்டு அரங்கம், ஒரு நீச்சல் குளம் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து

வருகின்றது. ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தப்படும். பின்னர், அந்தந்த மாவட்டத்தில் உள்ள முக்கிய நகரங்களில் விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும், அதன் பின்னர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் மற்றும் நகராட்சிக்கும் விளையாட்டு கட்டமைப்புகளை ஏற்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

துறையூரில் 35,000 மக்கள் வசித்து வருகிறார்கள். துறையூர், 9–வது வார்டில் அரசுக்குச் சொந்தமான இடம் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். ஒவ்வொரு தொகுதியிலும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு என்று சொந்தமான நிலம் வேண்டும். தகுந்த இடத்தை உள்ளாட்சி அமைப்புகள் அல்லது வருவாய்த் துறை மூலமாகத் தேர்வு செய்து, அதனை விளையாட்டு ஆணையத்திற்கு மாற்றம் செய்யும்பட்சத்தில், அல்லது விளையாட்டு ஆணையத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யும்பட்சத்தில், விளையாட்டுத் திடல் அமைப்பதற்கான கருத்துரு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகப் பெறப்பட்டு அரசின் நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு விளையாட்டுத் திடல் அமைக்க துறை நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். துறையூர் தொகுதிக்குட்பட்ட முசிறி ஒன்றியம், புத்தனாம்பட்டி கிராமப் பகுதியில் ஒரு கலைக் கல்லூரியும், ஒரு மேல்நிலைப் பள்ளியும் உள்ளன. அந்தப் பகுதியில் உள்ள மாணவ, மாணவிகள் அதிக அளவில் படித்து வருகிறார்கள். அந்தப் பகுதி மக்களுடைய தேவையைக் கருத்தில்கொண்டு, அந்த ஊராட்சியில் ஒரு விளையாட்டுத் திடல் அமைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

2015 பிப்ரவரி 19]

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரகப் பகுதிகளில் விளையாட்டுத் திடல் அமைப்பதற்கு 6 முதல் 7 ஏக்கர் இடம் வேண்டும். அந்த இடம் பொது மக்கள் பயன்படுத்தக்கூடிய இடமாக இருக்கவேண்டும். அதோடு அங்கு போக்குவரத்து வசதி உள்ள இடமாகவும் இருக்கவேண்டும். திருச்சி மாவட்டத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் உதவியுடன் பைகா என்ற திட்டத்தின்மூலம் 20 கிராமங்கள் Phase-I–லும், 20 கிராமங்கள் Phase-II-லும் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பான முறையில் விளையாட்டு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. பைகா திட்டத்தின்மூலம் ஒரு கிராமத்திற்கு தளம் அமைக்க ரூ.75,000/–மும், உபகரணங்கள் வாங்க ரூ.25,000/–மும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு ‘பைகா திட்டம்’ ‘Rajiv Gandhi Khel Abhiyan’ என்ற திட்டமாக மாற்றப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்மூலம் ஒரு மாவட்டத்தில் இரண்டு ஊரகப் பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு, ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய் வழங்கப்படவுள்ளது. ஆகவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த இடத்தில் விளையாட்டுத் திடல் அமைக்கும் கருத்துரு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக துறைக்குப் பரிந்துரைக்கப்பட்டால், துறை ரீதியாக Rajiv Gandhi Khel Abhiyan என்ற திட்டத்தின் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ள உதவியாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

28—

நூலகம்

***22762—திரு. அ. பாஸ்கர்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பாப்பம்பட்டியில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?